1979 மார்ச் 9]

அச்சடித்து மேசை மீது வைக்கலாமா என்று முன் வரிசையில் உள்ள தலைவர்களின் ஆலோசனையை அறிய விரும்புகிறேன். (ஒருவரும் பேசவில்லை). ஆகவே, நேற்றைய தினம் போலவே மேசைமீது அச்சடித்து வைக்கப்படும்.

பணகுடிக்கு அருகே மாற்றுப்பாதை.

*வினா எண் 310— திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதியிலுள்ள பணகுடியில் அமைக்கப்பட்டுள்ள நெடுஞ்சாலை எண். 7-க்கு மாற்று வழிப்பாதை அமைப்புக்கு எடுக்கப்பட்ட விவசாய நிலங்களுக்கு அரசு நஷ்ட ஈடு தந்துள்ளதா ?

(ஆ) இல்லையெனில், அதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதியிலுள்ள பணகுடியில் அமைக்கப்பட்டுள்ள தேசீய நெடுஞ்சாலை எண். 7-க்கு மாற்று வழிப்பாதை அமைப்புக்கு எடுக்கப்பட்ட விவசாய நிலங்களில் 9.40 ஏக்கரில் 8 ஏக்கருக்கான நஷ்ட ஈடு தொகை 27—9—1978 அன்று கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மீதமுள்ள 1.40 ஏக்கருக்கான நஷ்ட ஈட்டுத் தொகையை நில உரிமையாளர்களுக்கு வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முள்ளி-கொலக்கம்பை சாலை.

*வினா எண் 311— திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி ஜில்லா உதகைத் தொகுதி முள்ளி என்னுமிடத்திலிருந்து கொலக்கம்பை வரை செல்லும் சாலை மத்திய நெடுஞ்சாலைத் துறையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அச்சாலை வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

[உடுக்குறியிட்ட வினாக்கள் எண். 310 முதல் 317 வரை மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நடவடிக்கைக் குறிப்பில் அச்சிடப்பெற்றுள்ளன.]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வேளாண் பணிகளுக்கு மானியம்.

*வினா எண் 312—திரு. பெ.சு. திருவேங்கடம்: மாண்புமிகு வேளாண்மை—பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறையினரால் வழங்கப்படும் மானியங்கள் என்ன ?

(ஆ) எந்தெந்தப் பயிர்களுக்கு யாரால் வழங்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) மற்றும் (ஆ) : அவையின் முன் அறிக்கை @ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

அணைக்கட்டுகளின் நீரைப் பயன்படுத்தல்.

*வினா எண் 313—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு வேளாண்மை—பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அணைக்கட்டுகளில் உள்ள தண்ணீரைப் பயன்படுத்துவது சம்பந்தமாக மத்திய விவசாய, பாசன அமைச்சர் தமிழக அரசுக்கு பிப்ரவரி மாதம் கடிதம் ஏதேனும் எழுதியிருக்கிறாரா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

@..120ம் பக்கங்களில் இணைப்பாக I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.